தண்ணீர் பயனீடு

- ஒவ்வொரு நாளும் ஒருவர் சராசரி 100 லிட்டர் தண்ணீரை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.
- நாளொன்றுக்கு ஒரு நபருக்கு குறைந்த பட்ச தண்ணீர் தேவை 50 லிட்டர் என பரிந்துரைக்கப்படுகிறாது.
- சில வேளைகளில் 30 லிட்டர் தண்ணீரிலே தேவைகளை பூர்த்தி செய்யலாம். அருந்துவதற்கும் சமையலுக்கும் 5 லிட்டர், தங்களை சுத்தப்படுத்திக் கொள்ள 25 லிட்டர் தண்ணீரை பயன்படுத்தலாம்.
- உண்மை என்னவெனில் பெரும்பாலோர் குறைந்த பட்ச தேவை அளவுக்கு கூட தண்ணீரை பயன்படுத்துவதில்லை.

ஆயிரமாண்டு மேம்பாட்டு இலக்கு

நோக்கம் 7: சுற்றுச் சூழல் நிலைப்பாட்டினை ஊக்குவித்தல்

இலக்கு 10 : 2005 ஆண்டுக்கு முன் உலக மக்களில் ஒரு பகுதியினராவது ஆரோக்கிய சூழலுடன், குடிநீரை பாதுகாக்க வேண்டும் என்பதே இதன் இலக்கு.

- மருத்துவ ஆய்வுப்படி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 20 லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. இதன் விநியோக சுற்றளவு ஒரு கிலோ மீட்டர் துரத்திற்குள்ளாக இருக்க வேண்டும்.
- மலேசியாவில் சராசரியாக ஒருவருக்கு 300 லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு தேவைப்படுகிறது. நகர்புறங்களில் 500 லிட்டர் தண்ணீர் ஒருவருக்கு ஒருநாளைக்கு தேவைப்படுகிறது.

ஒரு ஆய்வின்படி 2000 ஆம் ஆண்டில் 80 நாடுகளைச் சேர்ந்த 375 கோடி மக்கள் நாள் ஒன்றுக்கு 20-50 லிட்டருக்கும் குறைவாகவே தண்ணீரை பெறுகின்றனர்.



இந்த சுற்றறிகையில் உள்ளடங்கியுள்ள விவரங்கள் மலேசிய பயனீட்டாளர்கள் தண்ணீர் பயன்பாட்டிலும் சேமிப்பிலும் கவனமாக இருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது.

வீட்டில் இருந்து தண்ணீர் சேமிப்பு தொடங்குகிறது

- வீட்டுத் தேவைகளுக்கு தண்ணீரை சாமர்த்தியமாக கையாளுதல்
- தண்ணீர் பயனீடு தொடர்பாக பயனீட்டாளர் கல்வி விழிப்புணர்வு
- தண்ணீரை மறுபடியும் பயன்படுத்துதல், மறுசுழற்சி செய்தால்
- மழைநீர் சேமிப்பு/ பயன்படுத்திய தண்ணீரை மீண்டும் உபயோகித்தல்.

தண்ணீர் தேவை, தண்ணீர் விநியோகம், விநியோக நிர்வாகம், நீர் வளத்தை நல்ல வகையில் பயன்படுத்துவது என்பன போன்றவற்றில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் தண்ணீர் சேமிப்பில் ஈடுபடுவதுடன் சுத்தமான நீர் எதிர்கால தலைமுறைக்கு கிடைக்கப்பெறுவதை உறுதி – செய்யவேண்டும். பயனீட்டாளர்கள், தொழில் துறையினரது தேவை மீது நாம் கவனம் செலுத்தவேண்டும் தண்ணீர் விநியோகத்திலேயே மட்டும் கவனம் இருக்கக்கூடாது. நமது வாழ்க்கை முறையில் மாற்றங்களை செய்தால் தண்ணீர் சேமிப்பு இலக்கை அடையலாம்.



தண்ணீரை அளவோடு அன்றாட வாழ்வில் பயன்படுத்துவோம்.

- www.ktak.gov.my
- www.fomca.org.my
- http://www.ecokids.ca/pub/eco_info/topics/water/water/index.cfm
- http://www.bewatersmart.net/links.html

---

1. மாநில தண்ணீர் கணக்கெடுப்பு 2001 ஐநா கணக்கெடுப்பு நிதி
2. உலக சுகாதார நிறுவனம் . ஐநா சிறுவர்கள் நிதி, உலக தண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதார மதிப்பீட்டு அறிக்கை 2000
3. பீட்டர் கிளேக் இடி ஏஎல் உலக தண்ணீர் (2000 -2003) (ஐலண்ட் பிரஸ் 2000)
4. மலேசிய தண்ணீர் தொழில்துறை வழிகாட்டி 2004

விரயமாக்க வேண்டாம் தண்ணீரை சேமிக்கவும்



ஐக்கிய நாடுகளின் (ஐ.நா) ஆண்டுக் கூட்டத்தில் 2005ஆம் ஆண்டு தொடங்கி 2015 ஆம் ஆண்டு வரையிலும் "வாழ்க்கைக்கு தண்ணீரே உயிர்நாடி"எனும் கருப்பொருளுடன் 10 ஆண்டுகள் இயக்கம் தொடங்கப்பட்டது.

தேசிய தண்ணீர் சேமிப்பு விழிப்புணர்வு இயக்கம் ஜுலை 2006 - ஜுன் 2008

KTAK

எரிபொருள், தண்ணீர் மற்றும் தொலைதொடர்பு அமைச்சு(கேடிஏகே)

இந்த அமைப்பின் ஒத்துழைப்புடன்

FOMCA

மலேசிய பயனீட்டாளர் சம்மேளனம் (போம்கா)

மனிதர்களின் வாழ்க்கைக்கு தண்ணீர் மூலாதாரமாக திகழ்கிறது. இந்த பூமியில் தண்ணீர் வளம் ஒரு வரையரைக் -குள்ளாகவே இருக்கிறது. எனவே, தண்ணீருக்கான தேவைகளும் போட்டியும் பயனீட்டாளர்களிடையே கடுமையாக இருக்கிறது.

1992ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சபை, ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22ஆம் தேதியை "உலக தண்ணீர் தினம்" என பிரகடனப்படுத்தியுள்ளது.

எரிபொருள் தண்ணீர், தொலை தொடர்பு அமைச்சு, போம்கா ஒத்துழைப்புடன் ஜூலை 2006 தொடங்கி ஜூன் 2008 ஆம் ஆண்டு வரையிலும் தேசிய தண்ணீர் சேமிப்பு விழிப்புணர்வு இயக்கத்தை தொடக்கி உள்ளது.

2008 ஆம் ஆண்டு வாக்கில் உள்நாட்டு தண்ணீர் தேவையை 10 விழுக்காடு குறைப்பது இந்த இயக்கத்தின் நோக்கமாகும்

தண்ணீர் சேமிப்பு இயக்கம் கீழ்க்காணும் நோக்கங்களை கொண்டுள்ளது.

- தண்ணீர் வளம் மற்றும் தண்ணீர் சேமிப்பு குறித்து பயனீட்டாளர் கல்வித் தகவல் வழங்குவது
- தண்ணீரை விரயமாக்காமல் இருக்க பயனீட்டாளர் –களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது
- இந்நாட்டின் தண்ணீர் தொழில் துறையில் தண்ணீர் வளத்தை பாதுகாக்கவும், தூய்மைக்கேட்டை குறைக்கவும் தண்ணீர் சேமிப்பை ஊக்குவிப்பதாகும்

இயக்கத்தின்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

1. பயனீட்டாளர் கல்வி மூலம் தகவல் வழங்குவது.
2. பயனீட்டாளர் விழிப்புணர்வை மேம்படுத்துவதுடன் பயிற்சி வழங்குவது.
3. உள்நாட்டு துறையில் தண்ணீர் பயனிடு மீதான ஆய்வு
4. மழைநீர் சேமிப்பு ஆய்வு (மலேசியாவில் தண்ணீர் பயன்பாட்டிற்கான மதிப்பீடு)
5. உலக தண்ணீர் தினவிழா.

நம் உடலில் தண்ணீர் அளவு?

- உணவு இல்லாமல் நாம் ஒரு மாதம் உயிர் வாழலாம். ஆனால் தண்ணீர் இன்றி 5 முதல் 7 நாட்கள் மட்டுமே நம்மால் தாக்கு பிடிக்க இயலும்.
- மனித உடலில் 65-70 விழுக்காடு தண்ணீர் உள்ளது.
- மனித மூளை 75 விழுக்காடு தண்ணீரை உள்ளடக்கியுள்ளது.

நமது உடம்பிலுள்ள தண்ணீர் கீழ்காணும் உடல் இயக்கத்திற்கு பயன்படுகிறது:

- உணவை உடல் பகுதிகளுக்கு கொண்டு செல்கிறது
- அதிர்வுகளை தவிர்ப்பதற்கு திரவமாக பயன்படுகிறது
- உடலின் வெப்பத்தை சீராக்குகிறது.

உங்களுக்கு தெரியுமா?

* சுமார் 300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்று இன்றும் பூமியில் தண்ணீர் அளவு இருக்கிறது.
* ஒரு மரம் 75 விழுக்காடு தண்ணீரை கொண்டுள்ளது.
* வீட்டில் பயன்படுத்தப்படும் 2/3 தண்ணீர் கழிவறைகளுக்கே பயன்படுத்தப்படுகிறது.
* வழக்கமாக 4 முதல் 6 கேலன் தண்ணீர் ஒவ்வொரு தடவையும் கழிவறையில் பயன்படுத்தப்படுகிறது.
* நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உணவு தயாரிப்பதற்கு சுமார் 6,800 கேலன் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.
* சுத்தமான நீரை பயன்படுத்தாதல் ஏழை நாடுகளில் நோயினால் ஒவ்வொரு நாளும் 5 வயதுக்கும் கீழ்ப்பட்ட சுமார் 10 ஆயிரம் சிறுவர்கள் மரணமடைகின்றனர்.

நம்மிடம் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது?

பூமியில் சுமார் 3/4 பங்கு தண்ணீர் உள்ளது.

பூமி பரப்பின் மொத்த தண்ணீர் அளாவு 34 கோடியே 40 லட்சம் கன மைல் அளவாகும்

* இதில் 31 கோடியே 50 லட்சம் கன மைல் அளவு (93%) கடல் நீர்.
* 90 லட்சம் கன மைல் அளவு (2.5%) தண்ணீர் பூமிக்கடியில் இருக்கிறது.
* 70 லட்சம் கன மைல் அளவு தண்ணீர் பனிப்பிரதேசங்களில் உரைந்து கிடக்கிறது.
* 53,000 கன மைல் அளவு தண்ணீர் ஆறு மற்றும் ஏரிகள் வழியாக பூமியை வந்தடைகிறது.
* 4000 கன மைல் அளவு தண்ணீர் காற்று மண்டலத்தில் கலந்திருக்கிறது
* 3,400 கன மைல் தண்ணீர் உடலில் உங்களிடம் இருக்கிறது

பூமியில் மூன்று விழுக்காடு மட்டுமே நல்ல தண்ணீர் உள்ளது. மனிதர்கள் ஒரு விழுக்காடு தண்ணீரை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

இது எதனை காட்டுகிறது என்றால் பூமியில் உள்ள எல்லா தண்ணீரையும் ஒரு கேலன் ஜாடியில் ஊற்றினால் மனிதர்களுக்கு ஒரு தேக்கரண்டி தண்ணீர் மட்டுமே கிடைக்கும்.